**3501**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : 4 × 2 = 8

1. பயனில் மூப்பில் பல்சான்றோரிடம் நரிவெரூஉத் தலையார் வேண்டுவன யாவை ?

2. மறவற்க எனவும் துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார் ?

3. கதிர் நாட்டு அரசன், அரசியார் பெயர்களை எழுதுக.

4. அந்தாதி - விளக்குக.

5. நாடெங்கும் புத்தகசாலை ஏன் வேண்டும் ?

6. எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய நூல்கள் யாவை ?

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : 3 × 4 = 12

7. கம்பர் 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

8. நற்றாய் காக்கைக்குப் பராய்க்கடன் உரைத்தவற்றைப் புலப்படுத்துக.

9. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறியுள்ளனவற்றை எழுதுக.

10. கண்ணகி, கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதம் யாது ?

11. பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: 3 × 4 = 12

12. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பற்றிக் குறிப்பெழுதுக.

13. 'சின்னஞ்சிறு வயதில் குழந்தைகளிடமிருந்து பறிக்கப்பட்ட விளையாட்டுகள்' என அப்துல் ரகுமான் குறிப்பிடுவன யாவை ?

14. சுரதா ஓர் உவமைக்கவிஞர் என்பதை அவர் பாடல்வழிச் சான்று காட்டுக.

15. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததுவும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'செய்ந்நன்றியறிதல்' பற்றி திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளை தொகுத்து வரைக.

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் செய்யுளின் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20. ''செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால் வம்பப் பெருந்தெய்வம் வந்தது இதுவென்கொல்''

அ) இவ்வடிகள் யார் கூற்று ?

ஆ) வம்பப் பெருந்தெய்வம் யார் ?

இ) வந்தது எங்கு ?

ஈ) இவ்வடிகளை இயற்றிய ஆசிரியர் யார் ?

***அல்லது***

21. ''வல்கையோடுனை மாய்த்துடல் புட்கிரையாக ஒல்செய்வேனெனா வுடைகவண் சுழற்றினன் இளையோன்'

அ) 'இளையோன்' யாவன் ?

ஆ) 'உனை மாய்த்து' - யாரை மாய்த்து ?

இ) 'வல்கையோடு' - யாருடைய வல்கையோடு ?

ஈ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?

VI. 22. 'இந்திய நாடிது' எனத் தொடங்கும் நாமக்கல் கவிஞரின் நாட்டுவாழ்த்தை அடிமாறாமல் எழுதி, பாவகையையும் குறிக்க. $4 + 2 = 6$

23. 'உதவி', எனத் தொடங்கும் குறளையும் 'தொழில்' என முடியும் குறளையும் அடிமாறாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் *இரண்டு* சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) அசைத்த ஆ) பட்டேன் இ) கொன்றார்

ஈ) அறைதல் உ) ஏகுவாய் ஊ) காணீர்.

25. கீழ்க்கோடிட்ட தொடர்களுள் ஏதேனும் *மூன்றனுக்கு* இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2 = 6$

அ) என்றடி <u>வாழ்த்துவம்</u> ஆ) <u>ஓங்கியுயர்</u>

இ) <u>யார்யார்</u> ஈ) <u>கோள்</u>

உ) <u>வாழிய</u> ஊ) <u>உருக்கொடு.</u>

26. எவையேனும் *இரண்டு* தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) பிழைப்பம்மா ஆ) தமிழன்னை இ) கடுந்திறல்

ஈ) தென்னகர் உ) பூஞ்சோலை ஊ) கண்ணீர்.

27. பின்வருவனவற்றிற்கு சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

முல்லைத் திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சி

28. ''வாங்கிய ஆழிதன்னை வஞ்சர்ஊர் வந்ததாமென்றாங்குயர் மழைக்கண்ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி'' $1 \times 4 = 4$

- இவ்வடிகளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

*அல்லது*

''உவமையணி'' அல்லது ''சொற்பொருட்பின்வருநிலை'' -யணியை விளக்குக.

VIII. பொருத்துக : $4 \times 1 = 4$

| திணை | | பாடலாசிரியர் |
|---|---|---|
| 29. குறிஞ்சி | — | ஓரம்போகியார் |
| 30. முல்லை | — | அம்மூவனார் |
| 31. மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. நெய்தல் | — | கபிலர் |
| | — | பேயனார். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. கிறித்துவக் கம்பர் என்றழைக்கப்பட்டவர்

அ) வீரமா முனிவர்

ஆ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

இ) ஜி.யு. போப்.

34. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந் திருமுறை

ஆ) ஏழாந் திருமுறை

இ) பன்னிரண்டாந் திருமுறை.

35. உமறுப்புலவர் எழுதிய நூல்

அ) முதுமொழி மாலை

ஆ) சின்னச் சீறா

இ) தேம்பாவணி.

36. இரட்சணிய யாத்திரிகத்துள் இடையிடையே அமைந்த இசைப் பாடல்களின் பெயர்

அ) போற்றித் திருவகவல்

ஆ) தேவாரம்

இ) சிந்தனை யாத்திரை.

37. "நமக்குத்தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்" என்று பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) பாரதியார்.

38. 'தமிழ் - பிரெஞ்சு கையகரமுதலி' - என்ற நூலை வெளியிட்டுள்ளவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) சுரதா.

39. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம்

ஆ) உலா

இ) பரணி.

40. தக்கயாகப்பரணி எழுதியவர்

அ) ஜெயங்கொண்டார்

ஆ) குமரகுருபரர்

இ) ஒட்டக்கூத்தர்.

41. 'சாகித்திய அகாதெமி' பரிசுபெற்ற 'பிசிராந்தையார் நாடக' - ஆசிரியர்

அ) சுரதா

ஆ) பாரதிதாசன்

இ) தாராபாரதி.

42. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி

ஆ) பேரகராதி

இ) அரும்பத அகராதி.

43. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள்

அ) மூன்று

ஆ) ஆறு

இ) முப்பது.

44. அறத்துப்பாலில் உள்ள குறள்களின் எண்ணிக்கை

அ) 700

ஆ) 380

இ) 250.

45. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவ மாலை

இ) நீதிநெறி விளக்கம்.

46. உத்தரவேதம் எனப் பெயர் பெற்றது

அ) புறநானூறு

ஆ) கம்பராமாயணம்

இ) திருக்குறள்.

47. 'சிறிய திருவடி' என்றழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

48. தமிழரசி குறவஞ்சியின் ஆசிரியர்

அ) திரிகூடராசப்பக் கவிராயர்

ஆ) வரதநஞ்சையப்பிள்ளை

இ) கவிமணி தேசிக விநாயகம்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. அறிவற்றங் காக்கும் .................. செறுவார்க்கும்

உள்ளழிக்க லாகா .................. .

50. தினைத்துணை ..................... செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரி ........................ .